வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இலவச வெளியீடு
(மூவாயிரம் பிரதிகள்)

ஆடி - ஆவணி 2012 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 16



## பிரான்சை நேசிக்கும் பிரெஞ்சு மக்கள்

**எங்களது தேசத்தில்** நாங்கள் எவ்வளவுதான் நொந்து போயிருந்தாலும் எக்காரணம் கொண்டும் இங்கிருந்து வெளியேறுவதற்கு நாங்கள் தயாராக இல்லை என்கிறார்கள் பிரெஞ்சுக்காரர்கள்.

கல்வி கற்பதற்கும் வேலை செய்வதற்கும் சாலச்சிறந்த இடம் பிரான்ஸ்தான் என அண்மையில் இடம்பெற்ற கருத்துக்கணிப்பில் 67 சதவீதமான பிரெஞ்சுக்காரர்கள் கூறியிருக்கிறார்கள்.

அயல்நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து நெருக்கடியான வேளைகளில் கூட தங்களின் தாய்நாடு தம்மை பேணிக்காத்ததாகவும் பேரிடர் எதனையும் தாங்கள் எதிர்கொள்ளவில்லை என்றும் கூறுகிறார்கள்.

ஏனைய பல வெளிநாட்டவர்களுக்கு ஒரு கனவுலகமாகவும் கலாச்சார மற்றும் சமூகவியல் மாதிரியாகவும் விளங்கும் பிரான்சையிட்டு அவர்கள் பெருமிதம் கொள்கின்றனர்.

ஐரோப்பா கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்ற போதிலும் பிரான்ஸ் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

2011ம் ஆண்டில் 80 மில்லியனுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பிரான்சை ரசித்துள்ளனர்.

பிரான்சின் அழகிய கடற்கரைகள், கிராமத்து பாரம்பரியம்மிக்க வீடுகள், சுவையூட்டும் உணவகங்கள் அவர்களைக் கவர்கின்றன.

## சம்பள அதிகரிப்பானது, தொழிற்சந்தையில் தாக்கத்தினை ஏற்படுத்துமா?

பிரான்சில் மாதாந்த வேதனம் இரண்டு சதவீதத்தினால் அதிகரிக்கப்படுகிறது என தொழில்துறை அமைச்சர் அறிவித்திருக்கிறார். யூலை முதலாம் நாள்முதல் நடைமுறைக்குவரும் இந்த சம்பள அதிகரிப்பின் விளைவாக நாடு பூராகவுமுள்ள 2.7 மில்லியன் வேலையாளர்கள் பயனடைகிறார்கள். ஆனால் இந்த சம்பள அதிகரிப்பு புதிய தொழில்வாய்ப்புகளை இல்லாதுசெய்யும் அபாயத்தை எழுப்பியிருப்பதாக துறைசார் வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள். பணியாட்களுக்கான சம்பளம் இரண்டு சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருப்பதால் நிறுவனங்கள் புதிய பணியாளர்களை நாடும் போக்கு குறைவடையும் என இவர்கள் வாதிடுகிறார்கள். ஏனைய மேற்கு நாடுகளைவிட பிரான்சில்தான் வேலையில்லாதோர் வீதம் பெரிதும் அதிகரித்திருக்கிறது. நாட்டினது ஆகக்குறைந்த சம்பளவீதம் ஒரு சதவீதத்தினால் அதிகரிக்குமிடத்து பிரான்சில் 20,000 பேர் தங்களது தொழில்வாய்ப்பினை இழப்பார்கள் என்கிறார்கள் இந்த வல்லுநர்கள். ஆனால் இந்த சம்பள அதிகரிப்பானது நாட்டினது தொழிற்சந்தையில் பெரிதாக எந்தத் தாக்கத்தினையும் ஏற்படுத்திவிடாது என அமைச்சு வாதிடுகிறது.

## Toussaint விடுமுறை இரு வாரங்களாக நீடிப்பு



வருடாந்த பாடசாலை விடுமுறைகளில் ஒன்றான Toussaint விடுமுறை 2 வாரங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கல்வியமைச்சர் Vincent Peillon அவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த முயற்சியை உயர்கல்வி கவுன்சில் அங்கீகரித்துள்ளது. இவ்வாண்டு 27 ஒக்ரோபர் முதல் 8 நவம்பர் வரை அமைந்த விடுமுறைகள் நவம்பர் 12 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மாணவர்கள் கல்வி நாட்களில் எந்தவித மாற்றமும் ஏற்படாத வண்ணமே விடுமுறை நாட்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



# சங்கீதா அச்சகம்

**IMPRIMERIE - PHOTOCOPIE**

தரம் - குறித்த தவணை - நியாயவிலை

☎: 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




**39, Bld. de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)**



# பிரான்ஸ் தேசியதினம்

❍ பிரான்ஸ் தேசிய தினமான 14 ஜுலையில் வருடா வருடம் நடைபெறும் இராணுவ அணிவகுப்பு 1880 முதல் நடைபெற்று வருகின்றது.

❍ பாரசிகப் படைகளுக்கெதிராக 3வது நெப்போலியன் தோல்வியை தழுவிய 10 வருடங்களின் பின்னர் உலகிற்கு பிரான்ஸ் வீரர்களின் வீரத்தையும் வலிமையையும் பறைசாற்றும் வண்ணம் முதல் இராணுவ அணிவகுப்பு நடாத்தப்பட்டது.

❍ ஆரம்பத்தில் குதிரைப்பந்தய மைதானமான Longchamp இல் நடைபெற்ற இராணுவ அணிவகுப்புக்கள் முதலாம் உலகப் போருக்கு பின்னராக 1919 முதல் Champs-Elysées இல் நடைபெற்று வருகின்றது.

❍ 1974 இல் அன்றைய அதிபர் Valéry Giscard d'Estaing இராணுவ அணிவகுப்பை Bastille இல் இருந்து République க்கு மாற்றியமைத்தார்.

❍ பின்னர் அரசுக்கு வந்த François Mitterrand மீண்டும் Champs-Elysées இற்கு மாற்றியமைத்தார்.

❍ 2002ம் ஆண்டு நடந்த அணிவகுப்பின் போது Jacques Chirac மீது கொலைமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. 25 வயதான தேசிய முன்னணி கட்சி ஆதரவாளர் Maxime Brunerie துப்பாக்கியால் சுட்டபோது இலக்கு விலகியதால் Jacques Chirac தப்பினார்.

Maxime Brunerie 10 வருட கடுங்காவல் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு 2009ம் ஆண்டு விடுதலை பெற்றார்.

❍ 2011 இல் பசுமைக்கட்சியின் தலைவர் Eva Joly இராணுவ அணிவகுப்புக்கள் தேவையற்றது எனக் கண்டனம் தெரிவித்தார்.

---

# பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் முறையும் கட்சிகளின் நிலைப்பாடும்

**யூன் 10 இல் இடம்பெற்ற** பிரான்ஸ் நாடாளுமன்ற முதற்சுற்றுத் தேர்தலின் போது 577 தொகுதிகளிலும் தேர்தல் நடைபெற்றது. 36 உறுப்பினர்கள் 50வீதத்திற்கும் கூடுதலான வாக்குகள் பெற்று முதற்சுற்றிலேயே தெரிவாகினர்.

இதில் 25 பேர் சோசலிசக்கட்சியின் இடதுசாரி கூட்டணியிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். (சோசலிசக்கட்சி – 22, இடதுசாரி – 2, பச்சைக்கட்சி – 1)

11 உறுப்பினர்கள் வலது முன்னணியில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். (UMP கட்சியினர் – 9, Nouveau Centre – 1, வலதுசாரி – 1)



மீதி உள்ள 541 தேர்தல் தொகுதிகளுக்கு யூன் 17 இல் தேர்தல் நடைபெற்றது. இத்தொகுதிகளில் 12,5வீதத்திற்கு கூடுதலான வாக்குகள் பெற்ற வேட்பாளர்களுக்கிடையில் போட்டி இடம்பெற்றது.

46 தொகுதிகளில் மும்முனைப் போட்டியும், 495 இடங்களில் இருமுனைப் போட்டியும் இடம்பெறுகின்ற சூழ்நிலை உருவானது.

7 நாட்கள் இடைவெளியில் இரண்டாம் சுற்றுத் தேர்தல் வழமைபோல் இடம்பெற்றது. தேர்தல் திணைக்களத்தின் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அறவே வெற்றிவாய்ப்பு இல்லையென எண்ணியவர்கள் இரண்டாம் சுற்றுப் போட்டியில் இருந்து வாபஸ் பெறத் தொடங்கினர். இவ்வாறு இரண்டாம் சுற்றுக்குத் தேர்வாகி இருந்த 105 வேட்பாளர்கள் போட்டியில் இருந்து விலகினர்.

கட்சிகளிடையே இடம்பெற்ற தேர்தல் உடன்பாடுகள் காரணமாகவும் சில வேட்பாளர்கள் வாபஸ் பெற்ற நிலைமையும் ஏற்பட்டது. இவ்வண்ணம் போட்டியாளர்கள் வாபஸ் பெற்ற போது 15 தொகுதிகளில் ஒரு வேட்பாளர் மாத்திரமே எஞ்சியிருந்தார். எனினும் தேர்தல் ஏற்பாடுகளின்படி இந்த தொகுதிகளிலும் தேர்தல் இடம்பெற்றது. உறுப்பினர்களின் 100 வீத வாக்குகளுடன் 15 பேரின் தெரிவுகள் உறுதி செய்யப்பட்டன. இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுள் 93ம் மாவட்டத்தில் உள்ள Blanc Mesnil நகரை உள்ளடக்கிய தேர்தல் தொகுதியும் ஒன்றாகும்.


300 இடங்களைக் கைப்பற்றி சோசலிசக் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. எனினும் சோசலிசக் கட்சியின் கூட்டணிக்கு 315 இடங்கள் கிடைத்துள்ளன. சார்க்கோசி தலைமையிலான UMP கூட்டணிக்கு 215 இடங்கள் கிடைத்துள்ளன. மூன்றாவது பெரிய கட்சியாக 18 இடங்களைப் பெற்று பச்சைக் கட்சி (Verts) வெற்றி பெற்றுள்ளது.

மறின்–லு–பென் (Marine-le-Pen) தலைமையிலான தேசிய முன்னணி (Front Nationale) 2 இடங்களை வென்றுள்ளது. இதில் 22 வயது நிரம்பிய பெண் பாராளுமன்ற உறுப்பினரும் ஒருவர். இவர் கட்சியின் ஸ்தாபகர் லு–பென்னின் பேத்தியும், தற்போதைய கட்சியின் தலைவரின் பெறாமகளுமாவார்.

சோசலிசக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் செகொலன் றோயல் மற்றும் Modem கட்சியின் தலைவர் பிரான்சுவா பயறோ ஆகிய இருவரும் தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களுள் முக்கியமானவர்களாவர்.

கடந்த 25 ஆண்டுகளாக பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. அத்துடன் 11 தொகுதிகள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற பிரெஞ்சு மக்களிற்காக 2012ம் ஆண்டில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களால் வேட்பாளர்களுக்கிடையிலான போட்டிகள் கடுமையாகவே உள்ளன. 1919ம் ஆண்டில் 526 தொகுதிகள் இருந்துள்ளன.

பிரான்சில் 101 மாவட்ட ரீதியான தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படுகின்றது. 75ம் மாவட்டமான பாரிசில் 2012இல் தொகுதிகளின் எண்ணிக்கை 21 இற்குப் பதிலாக 18 தொகுதிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1986 இலிருந்து 13 தொகுதிகளாக இருந்த 93ம் மாவட்டம் 2012 இல் 12 தொகுதிகளாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குறைக்கப்பட்டே வெளிநாடுகளில் 11 தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டிலிருந்து மயொத் (Mayotte) பிரதேசம் 101ம் மாவட்டமாக இணைக்கப்பட்டது. ❍



## Bussy Saint Georges இல் மிகப்பெரிய பௌத்த மடாலயம்

பாரிசின் புறநகர் Bussy Saint Georges இல் 7000m² இல் ஐரோப்பாவின் மிகப்பெரிய பௌத்த மடாலயம் அமைக்கப்பட்டுள்ளது. நவீன கட்டடக் கலையை மையமாகக் கொண்டு பிரான்ஸ் கட்டடக் கலைஞர்களுடன் தாய்வான் கட்டட கலைஞர்களும் இணைந்து மடாலயத்தை வடிவமைத்துள்ளனர்.

கட்டட செலவான 18 மில்லியன் யூரோக்களை தாய்வான் நாட்டு பௌத்த அமைப்பான Fo Guang Shanம் அதன் பற்றாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஒரே நேரத்தில் 1100 பேரை வரவேற்கும் வண்ணம் இம் மடாலயம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பகுதி மத போதனைகளுக்காகவும், மறுபகுதி பௌத்த கலாச்சார மையமாகவும் இயங்கவுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள 5 மீற்றர் உயரமுள்ள புத்தர் சிலை தாய்வான் நாட்டு சிற்பிகளால் பர்மா தேச வெண்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. ❍


## கழிவுநீர் மீண்டும் கழிவுநீராகிறது!

சுற்றுச் சூழல் பாதுகாப்பு நலன் மற்றும் சிக்கனம் கருதி நீர் வீணாவதைத் தடுக்க இப்படி ஒரு வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதேபோல வேறு பாவனைப் பொருட்களிலும் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



தென்கொரிய வடிவமைப்பாளர் Jang Woo-Seok கை கழுவும் நீரை மறுசுழற்சி செய்வதன் மூலம் மீண்டும் கழிவகற்ற பயன்படும் வகையில் நீர்த் தொட்டியொன்றை வடிவமைத்துள்ளார். ❍

## பாரிசில் மக்களைக்கவரும் நினைவுச் சின்னங்கள்



கடந்த ஆண்டு ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்நினைவுச்சின்னங்களை பார்வையிட்டதாக பிரான்சின் உல்லாசப் பயணத்துறை தெரிவிக்கிறது.

இதில் நொத்ற–டாம் தேவாலயம் (1 கோடி 36 இலட்சம் மக்கள்) முதலாவது இடத்திலும், இரண்டாவதாக அன்வர்ஸ் இல் உள்ள Sacré - Coeur தேவாலயமும் (1 கோடி மக்கள்) மூன்றாவதாக லூவர் (Louvre) நூதன சாலையும் இடம்பெற்றுள்ளது. இதை 90 இலட்சம் மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

வருடாந்தம் பிரான்சின் உல்லாசப்பயணத்துறை, ஆடி மாதத்தில் 64 நினைவுச்சின்னங்களை பார்வையிட்டவர்களின் எண்ணிக்கையை வெளியிடுகின்றது. 2011 இல் 82.5வீதமான பார்வையாளர்கள் முன்னணியில் உள்ள 13 நினைவுச் சின்னங்களை பார்வையிட்டுள்ளனர். இந்த முக்கிய 64 நினைவுச் சின்னங்களை 7 கோடி 26 இலட்சம் மக்கள் பார்வையிட்டுள்ளனர். இது 2010ம் ஆண்டைவிட 2, 5வீதத்தினால் அதிகரித்துள்ளது. ❍


**அல்லைப்பிட்டி இணையம்**

உங்களை அன்புடன் அழைக்கிறது

www.allaiyoor.com


## அந்நிய மொழித்தேர்ச்சியில் பிரெஞ்சு இளைஞர் பின்னடைவு

14–15 வயது ஐரோப்பிய இளவயதினரில் 42 வீதம் பேர் முதலாவது வெளிநாட்டு மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கின்றனர் என ஐரோப்பிய ஆணைக்குழு அறிக்கை தெரிவிக்கின்றது. ஆனால் பிரான்சில் இதே வயதை ஒத்த மாணவர்களில் 14வீதத்தினரே தேர்ச்சிபெற்றவர்களாக உள்ளனர். ஐரோப்பாவில் உள்ள இளவயதினருள் சுவீடன் நாட்டவர்களே முதலாவது வெளிநாட்டு மொழிகளில் திறமையுள்ளவர்களாக முதல் இடத்தில் (80வீதம்) உள்ளனர். ஐரோப்பிய ரீதியில் பிரான்ஸ்தான் கடைசி இடத்தில் உள்ளதாக ஐரோப்பிய ஆணையகம் தெரிவிக்கின்றது.

இது பிரெஞ்சுப்பெற்றோர் தங்கள் குழந்தைகளின் மொழி அறிவில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்பதாக சமூகவியலாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ❍

## பிரெஞ்சுப் புதிய பாராளுமன்றில்...



**6** குழுக்கள் அங்கம் வகிக்கின்றன.

1. சோசலிச கட்சி (PS)
2. ஐக்கிய முன்னணி இயக்கம் (UMP)
3. ஐரோப்பிய சுற்றுச்சூழல் பச்சைக் கட்சி (EELV)
4. இடது ஜனநாயக குடியரசுக் கட்சி (GDR)
5. பாரம்பரிய இடது கட்சி (RPG)
6. சுதந்திர ஐக்கிய ஜனநாயக வாதக் கட்சி

**577** பாராளுமன்ற உறுப்பினர்களில் **243** பேர் இம்முறை புதிய உறுப்பினர்கள்

**40** சதவீதமானோர் மீளத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள்.

**155** பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். இம்முறையே முதன்முதலாக இவ்வாறு அதிகளவான பெண்கள் தெரிவாகியுள்ளனர்.

**22** வயதுடைய Marion Maréchal - Le Pen (FN) பாராளுமன்ற உறுப்பினர்களில் கடைக்குட்டி என்று வர்ணிக்கப்படுகிறார்.

**76** வயது François Scellier (UMP) பாராளுமன்றில் உள்ள மூத்த உறுப்பினராவார்.

**8** பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டவர்கள்.



# பிரான்சில் வீதித்திருட்டு அதிகரிப்பு பொலிஸ் எச்சரிக்கை

கடந்த மாதங்களில் வீதிகளில் தங்கச் சங்கிலி பறிப்பு அதிகரித்து வருவதாக பொலிஸ் தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது. பெப்ரவரி மாதத்தில் 38 திருட்டுக்கள், மார்ச்சில் 191 ஆகவும், ஏப்ரலில் 154 ஆகவும், மே மாதத்தில் 400 ஆகவும் கிடுகிடுவென உயர்ந்திருக்கின்றது.

அதிகரித்துவரும் நகைத் திருட்டுக்கள் நாளுக்கு 10 எனும் வகையில் உயர்ந்துள்ளமை மிகவும் ஆபத்தான நிலை என பொலிஸ் தலைமையகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பெரும்பாலும் திருடர்கள் வீதியில் தனியாக செல்லும் பெண்களின் கழுத்தில் இருக்கும் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஸ்கூட்டரில் தப்பி ஓடி விடுகின்றார்கள். அதி வேகமாக நடக்கும் இந்தத் திருட்டுக்களால், திருடர்களைப் பிடிப்பதென்பது மிகவும் கடினமான பணியாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எந்தெந்தப் பகுதிகளில் இவ்வாறு அதிக திருட்டுக்கள் நடைபெறுகின்றனவோ அப்பகுதிகளில் வீடியோ கண்காணிப்பை தாம் அதிகரிக்க இருப்பதாகவும் உதாரணமாக கடந்த மாதத்தில் அதிக திருட்டுக்கள் இடம்பெற்ற Belleville பகுதியில் இருந்து இப் பணியை தாங்கள் ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்த அவர், பொதுமக்கள் தாங்கள் அணியும் விலைமதிப்புள்ள நகைகளை பெருமளவு வெளியில் தெரியாமல் அணிவது நல்லது எனவும் தெரிவித்துள்ளார்.




**20 வது கலைத்தென்றல்**
பாட்டுத்திறன் போட்டி
**9 வது இசைபாடும் இரவு**
**30.09.2012**


### ● பிரேம் கோபால்

பிரான்ஸ் தமிழர் நடுவ கலை பண்பாட்டுக் கழகத்தின் ஒழுங்கமைப்பில் 17.06.2012 ல் ஈழத் தமிழ் நடனக் கலைஞர் பிரேம் கோபால் பிரான்ஸ் தமிழ்கலைஞர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

### ● மெய்வல்லுனர் போட்டி - 2012

பிரான்ஸ் தமிழர் விளையாட்டுத் துறை நடாத்திய 19வது மாவீரர் நினைவு சுமந்த மெய்வல்லுனர் போட்டி - 2012 15.07.2012 அன்று Porte de Pantin இல் நடைபெற்றது.

# பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

### ● நூல் வெளியீட்டு விழா

நெடுந்தீவு பேராசிரியர், டாக்டர். சேர் மருது கந்தப்பு (லண்டன்) அவர்களின் மூளை நரம்பியல் சிகிச்சை மருத்துவ நூல் அறிமுக விழா 17.06.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● சங்கொலி - 2012

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் பிரான்ஸ் நடாத்திய சங்கொலி - 2012 தேசவிடுதலைப் பாடற்போட்டி 17.06.2012 அன்று La Courneuve இல் நடைபெற்றது.

### ● மாதகல் : விளையாட்டு விழா

மாதகல் நலன்புரிச் சங்கம் நடாத்திய 8வது வருடாந்த விளையாட்டு விழா 24.06.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● குறும்பட விழா

தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் பிரான்ஸ் - நடாத்தும் குறும்பட விழா - 2012, 24.06.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● தமிழர் விளையாட்டு விழா

பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கமும் இணைந்து நடாத்திய 15 வது தமிழர் விளையாட்டு விழா 01.07.2012 அன்று L'Aire des Vents Dugny மைதானத்தில் நடைபெற்றது.

### ● கலைவாணி மக்கள் சங்கம்

கோண்டாவில் வடக்கு கலைவாணி மக்கள் சங்கம் நடாத்திய பொதுக்கூட்டமும், கலை நிகழ்வுகளும் 08.07.2012ல் பாரிசில் நடைபெற்றது.



### ● இலக்கிய மாலை

ஐந்து நூல்களின் அறிமுகம், இலக்கிய மாலை நிகழ்வாக 15.07.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● புளோமினில் தமிழ்ச்சங்கம்

புளோமினில் தமிழ்ச் சங்கம் தமிழ்ச்சோலை மாணவர்களுக்காக நடாத்திய இல்ல விளையாட்டுப் போட்டி 21.07.2012 அன்று Le Blanc Mesnil இல் நடைபெற்றது.

### ● பொன்.சுந்தரலிங்கம்

புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் பிரான்ஸ் நடாத்திய பொன்.சுந்தரலிங்கம் அவர்களின் இசைத்தட்டுவெளியீடு 21.07.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.

### ● தாய் முற்றம் கலை மாலை

வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ் நடாத்திய தாய் முற்றம் கலை மாலை 22.07.2012 அன்று பாரிசில் நடைபெற்றது.



# பிரெஞ்சு சிறைச்சாலைகளில் இட நெருக்கடி

சிறைகள் நிரம்பி வழியும் போது சமூகம் பாதுகாப்பாக இருக்கின்றது என பொது அபிப்பிராயம் நிலவுகிறது.
ஆனால், ஓர் சிறைக்கைதி விடுதலையாகி வெளியே செல்லும் நாளே அவனுக்கு பிரகாசமான நாள். சிறைக்குள்ளே வரும்நாள் அல்ல.

2012 மே மாத ஆரம்பத்தில் எடுத்த கணிப்பின்படி பிரெஞ்சு சிறைச்சாலைகளில் 67073 பேர் சிறைவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் 57170 பேருக்கே சிறையில் இடம் உள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக சிறைச்சாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக சிறை ஆணையாளர் தெரிவிக்கின்றார். இடப் பற்றாக்குறையினால் சிறைக் கைதிகள் நிலத்தில் மெத்தையை போட்டு படுக்க வைக்கப்படுகின்றனர்.

சிறு குற்றங்களுக்கு மன்னிப்பளித்து கைதிகளை விடுதலை செய்யவேண்டும் எனவும், சிறையில் அளவிற்கதிகமான சிறைக் கைதிகள் இருப்பது அவர்களை சமுதாயத்தில் மீண்டும் இணைத்து நல்லபடியாக வாழவைக்க எடுக்கும் முயற்சிக்கு பின்னடைவாக உள்ளதாகவும் ஆணையர் மேலும் தெரிவிக்கின்றார். ❍



# ஒருபாலினத் திருமணம்

## அனுமதியளிக்கின்றது பிரான்ஸ்!

ஸ்பெயின், ஒல்லாந்து, பெல்ஜியம், கனடா, தென் ஆபிரிக்கா, நோர்வே, சுவீடன், போர்த்துக்கல், ஐஸ்லாந், ஆர்ஜென்ரீனாவைத் தொடர்ந்து பிரான்சும் ஒருபாலருக்கான திருமணத்தையும், அவர்கள் குழந்தைகளை தத்தெடுப்பதற்கான உரிமையையும் சட்டரீதியாக 2013 இளவேனிற்காலம் முதல் அங்கீகரிக்கவுள்ளது.

பிரான்ஸ் பிரதமர் Jean-Marc Ayrault இந்தத் தகவலை அதிகாரபூர்வமாக 03.07.2012ல் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலின் பிரதான வாக்குறுதிகளில் ஒன்றான ஒருபாலருக்கான திருமண அங்கீகாரத்தை ஆட்சிக்கு வந்து ஒரு சில மாதங்களிலேயே நிறைவேற்றியமை தங்களுக்கு பிரான்சுவா ஹொலந் இன் மேல் பெருமதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஒரு பாலினத்தவரின் உரிமைகளுக்காக போராடும் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.
வெகுவாக மாறிவரும் நம் சமூகத்தின் வாழ்க்கை முறை மனப்பாங்கிற்கு ஏற்ப, அவர்களது அபிலாஷைகளை பிரதிபலிக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என பிரதமர் Jean-Marc Ayrault மேலும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பதினொரு நாடுகள் தவிர்த்து அமெரிக்காவின் 7 மாநிலங்களிலும் மெக்சிக்கோவின் தலைநகர் மெக்சிக்கோ சிட்டியிலும் இந்த அங்கீகாரங்கள் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரான்சில் ஒருபாலார் திருமணம், மற்றும் அவர்கள் குழந்தைகள் தத்தெடுப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட வாக்கெடுப்பில் 63 சதவீதமான பிரான்ஸ் நாட்டவர்கள் ஒருபாலர் திருமணத்திற்கு ஆதரவாகவும், 56 சதவீதமானோர் குழந்தைகள் தத்தெடுப்பிற்கு ஆதரவாகவும் வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ❍



# சவூதி மன்னரின் முன்னாள் மனைவி பாரிசில் கைது

சவூதி அரேபிய மன்னரின் முன்னாள் மனைவி Maha Al Sudaïri பாரிசின் Palace Shangri-la ஹோட்டலில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

23 டிசம்பர் முதல் தனது உறவினர்கள், பணியாளர்கள், மெய்க்காப்பாளர் களுடன் தங்கியிருந்தவர், 6 மில்லியன் யூரோக்கள் ஹோட்டல் வாடகைப்பணம் கட்டாத நிலையில் தனது பரிவாரங்கள் 60 பேருடனும் 100 இற்கு மேற்பட்ட டிரங்குப் பெட்டிகளுடனும் நிர்வாகத்திற்கு தெரியாமல் வெளியேற முற்படு கையிலேயே பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

சவூதி நாட்டு மன்னரின் முன்னாள் மனைவி என்னும் அந்தஸ்து அவருக்கு இருப்பினும் Maha Al Sudaïri இன் கடன்கள், செலவுகளுக்கு தான் பொறுப்பேற்க முடியாது என மன்னர் கைவிரித்து விடவே திருட்டுத்தனமாக ஹோட்டலை விட்டு வெளியேற முற்பட்டுள்ளார் என ஹோட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இவர் ஏற்கனவே 2009 இல் பாரிசிலுள்ள ஆடம்பர கடைகளில் 15 மில்லியன் யூரோவிற்குமதிகமாக பொருட்களை வாங்கி பணம் செலுத்தும் போதும் பிரச்சனை ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ❍



## செகலோன் றோயலின் பணப்பையும் திருட்டு!



**சோசலிசக் கட்சியின்** பிரதம உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான செகலோன் றோயலின் மணிபேர்சை பிக்பாக்கட் அடித்துள்ளார்கள். பாரிஸ் (7) பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் ஷொப்பிங் சென்றிருந்த செகொலன் றோயலின் கைப்பையில் இருந்து அவரது கையடக்க மணிபேர்சை லாவகமாகத் திருடிச் சென்றுள்ளனர். ஷொப்பிங் செய்த பொருட்களுக்கு பணம்கொடுக்க கைப்பையில் மணிபேர்சைத் தேடிய போதே திருட்டுப் போயுள்ள விபரம் செகலோனிற்கு தெரியவந்துள்ளது.

இத் திருட்டு தொடர்பான புகார் ஒன்றை Boulogne பொலிஸ் நிலையத்தில் அவர் பதிவு செய்துள்ளார்.

## யூரோ கிண்ணம் 2012: விமர்சனத்திற்குள்ளாகும் பிரெஞ்சு அணியின் அதியுச்ச செலவீனம்

இடம்பெற்று முடிந்த 2012ஆம் ஆண்டுக்கான யூரோ கிண்ணப் போட்டிகளின் போது பிரான்சினது தேசிய உதைபந்தாட்ட அணியினது பயிற்சி, பயணம் மற்றும் தங்குமிடம் போன்றவற்றுக்காக அதியுச்சபணம் செலவிடப்பட்டிருக்கிறது.



உதைபந்தாட்டமும் பணமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த இரு வேறு அம்சங்கள். இடம்பெற்று முடிந்த போட்டிகளின் போது தேசிய அணிக்காகச் செலவிடப்பட்ட பணம், அதனைச் செலவிட்டது யார் என்பது போன்ற விபரங்களை வெளியிடுவதில் தொடர்ந்தும் மௌனம் காக்கவே பிரெஞ்சு உதைபந்தாட்டக் கூட்டமைப்பு விரும்புகிறது.

எவ்வாறிருப்பினும் இம்முறை பிரெஞ்சு அணிக்கான விருந்தினர் விடுதிக்கான செலவுகள் வானைத் தொடும் அளவிற்கு இருப்பதாக விளையாட்டுத்துறைசார் பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள். இவர்களது பயணங்களின்போது தனிவிமானம் கூட ஒழுங்குசெய்யப்பட்டிருந்ததாக இந்தப் பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள்.

பிரெஞ்சு உதைபந்தாட்டக் கூட்டமைப்பு வேறுபட்ட தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு போட்டிகளை நேரடியாக ஒளி பரப்புவதற்கான உரிமத்தினை விற்பனை செய்வதன் மூலம் உதைபந்தாட்ட அணிக்கான பெரும் அளவிலான நிதியை பெற்றுவருகின்றது. விளம்பர அனுசரணைகள் மற்றும் ஒளிபரப்பு உரிமத்தின் மூலம் வருடமொன்றிற்கு 5 இலட்சத்திலிருந்து 4 கோடி யூரோக்கள் வரை உதைபந்தாட்டக் கூட்டமைப்புக்குக் கிடைக்கின்றது.

பிரெஞ்சு அணி காலிறுதிப் போட்டிகளுக்குள் நுழைந்தால் அணியில் இடம்பெறும் வீரர்கள் ஒவ்வொருவரும் 100, 000 யூரோக்களையும், அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தால் மேலதிகமாக 50, 000 யூரோக்களையும் பெறுவார் என உடன்பாடு செய்யப்பட்டிருந்தது. ○



**பாரிஸ் மொன்மார்ட்டில்** அமைந்துள்ள Sacré-Coeur தேவாலயத்தில் (White Church) 108m தூரத்தை (160 படிக்கட்டுகள்) ஏறிக் கடப்பதற்கான ஃபனிகுலர் (லிப்ட் – Funiculaire) சேவையை 12 ஜுலை 1900 இல் பாரிஸ் மாநகராட்சி ஆரம்பித்து வைத்தது. உல்லாசப்பயணிகளின் வருகையைக் கருத்திற் கொண்டும், படிகளில் ஏறி செல்லமுடியாதவர்களின் நலன்கருதியும் இச்சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. 1935 இல் முற்றாக மின்சார சக்தியில் இயங்கும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டு 1991இல் மின்சாரத்தில் தானியங்கியாக செயற்படும் வண்ணம் நவீனமயப்படுத்தப்பட்டது. வருடத்துக்கு 2 மில்லியன் மக்கள் இந்த லிப்றினை பயன்படுத்துகின்றனர். தற்போது பாரிஸ் போக்குவரத்து (RATP) நிர்வாகத்தினரால் ஃபனிகுலர் நிர்வாகிக்கப்படுகின்றது.


# அம்மன் ஆடையகம்

'அழகிய ஜவுளிகளின் மலிவாலயம்'

நாங்கள் விலைகுறைவு என்று சொன்னால் நீங்கள் நம்பப் போவதில்லை ! / ஒருமுறை, ஒரே முறை வந்து பாருங்கள், உண்மை துலங்கும் !

**Tél.: 06.68.07.87.36**

**24, Rue de Départment, 75018 PARIS (M°: La Chapelle)**

(அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)

## சிகரட் கட்டைகளை தெருவோரங்களில் வீசினால் அபராதம்

# பாரிசில் அறிமுகமாகும் புதியவகை குப்பைத்தொட்டி

வீதி எங்கும் இறைந்து கிடக்கும் சிகரட் அடிக்கட்டைகளை அழிப்பது பாரிஸ் மாநகராட்சியின் அடுத்த பாரிய நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2008 இல் இருந்து பொதுஇடங்களில் புகைப்பிடிக்கத் தடைவிதிக்கப் பட்டதிலிருந்து நடைபாதைகளிலும், தெருவோரங்களிலும் சிகரட் அடிக்கட்டைகள் பெருகிவருகின்றது.

வருடத்திற்கு 315 தொன் அடிக் கட்டைகள் பாரிஸ் தெருவோரங்களிலும் சாக்கடைகளிலும் எடுக்கப்படுகின்றது.

அதிகளவு நச்சுத்தன்மை வாய்ந்த இந்த அடிக்கட்டைகளால் சூழல் மாசடைவதற்கான அத்தனை சாத்தியங்களும் உள்ளமையாலும், சாக்கடைகளில் சேரும் அடிக் கட்டைகளால் பாரிஸ் நீர் மாசடைவதாலும் பாரிஸ் மாநகராட்சி இந்த முடிவை எடுத்துள்ளது.

முதல் நடவடிக்கையாக பாரிஸ் தெருக்களில் அமைந்துள்ள குப்பைத் தொட்டிகளுடன் இணைந்த சிகரட் அணைக்கும் தட்டுக்களை நிறுவ உள்ளார்கள்.

அதன் தொடக்கமாக தற்போது 10000 புதிய இவ்வகைக் குப்பைத் தொட்டிகளையும் 2013 நடுப்பகுதியில் மேலும் 30000 குப்பைத்தொட்டிகளையும் பாரிஸ் முழுவதும் நிறுவ உள்ளனர்.

தொடர்ந்து சிகரட் அடிக் கட்டைகளை தெருவோரங்களிலோ அல்லது நடைபாதையிலோ வீசுவோருக்கு 35யூரோ அபராதம் விதிக்கப்படவுள்ளது.

இப் புதிய வகை குப்பைத் தொட்டிக்கு 8, 40 யூரோப்படி 84000 யூரோக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக பாரிஸ் துணைமேயர் François Dagnand தெரிவித்துள்ளார். ❍



# உலகின் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் பட்டியலில் பிரான்ஸ் வீரர்களுக்கு இடமில்லை!

ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்மேளனம் (LUEFA) உலகின் தற்போதைய சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் 32 பேர் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் பிரான்ஸ் நாட்டு வீரர்கள் எவரும் இடம் பிடிக்கவில்லை. ஸ்பெயினிலிருந்து 9 வீரர்களும், இத்தாலி, இங்கிலாந்திலிருந்து தலா மூன்று வீரர்களும், போர்த்துக்கல்லிலிருந்து 2வீரர்களும் தெரிவாகியுள்ளனர்.

FIFA தரவரிசையின் படி பல ஆண்டுகளாக 4 இடங்களுக்குள் அங்கம் வகித்து வந்த பிரான்ஸ் அணி, தற்போது 14வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதும் 2010 உலகக்கிண்ணப் போட்டியில் வீரர்களுக்கும் பயிற்சியாளருக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பால் உலக ஊடகங்கள் முன் ஏற்பட்ட தலைகுனிவு, 2012 ஐரோப்பியக்கிண்ணப் போட்டியில் கால் இறுதி வரை முன்னேறினாலும் தொடரமுடியாமல் வெளியேறியது, 2012 ஐரோப்பியக் கிண்ண தோல்வியால் பயிற்சியாளர் Laurent Blanc இன் வெளியேற்றம் எனத்தொடர்ந்துவரும் பிரச்சினைகள் மத்தியில் வெளியாகியுள்ள இந்த அறிக்கை பிரான்ஸ் உதைபந்தாட்ட ரசிகர்கள் மற்றும் ஊடகங்கள் மத்தியில் பெருத்த அதிருப்தியை உருவாக்கியுள்ளது. ❍

# துயர்பகிர்வு

**அமரர்**
**சின்னத்துரை பத்மாவதி**
(நீர்வேலி)
தோற்றம் : 02.09.1930
மறைவு : 04.06.2012



**அமரர்**
**பத்மநாதன் உதயராணி**
(தாண்டிக்குளம்)
தோற்றம் : 05.10.1957
மறைவு : 10.06.2012



**அமரர்**
**சதாசிவம் யோகம்மா**
(தாவடி)
தோற்றம் : 14.08.1927
மறைவு : 12.06.2012



**அமரர்**
**தம்பு குலசேகரம்பிள்ளை**
(வேலணை)
தோற்றம் : 23.01.1927
மறைவு : 06.07.2012



**15வது ஆண்டு**
**அமரர்**
**தியாகராஜா சொர்ணராஜா**
தோற்றம் : 29.03.1960
மறைவு : 04.08.1997



**அமரர்**
**டானியல் ஜோன் ஜோகேந்திரன்**
தோற்றம் : 31.05.1960
மறைவு : 25.11.2011



**அமரர்**
**உமாபதிசிவம் ஜெயலட்சுமி**
(மண்கும்பான்)
தோற்றம் : 06.03.1950
மறைவு : 13.07.2012



**தவறான மனிதர்களோடு**
**தர்க்கம் செய்வதை விட**
**சரியான மனிதர்களோடு**
**அனுசரித்துப் போவதே சிறந்தது**

**அர்த்தமற்ற வார்த்தைகளை விட**
**அர்த்தமுள்ள மௌனமே சிறந்தது**





பாரிஸ்
இந்திரா கணேஷின்
மேல்நாட்டு
மாப்பிள்ளை
(சிறுகதைத் தொகுப்பு)

# நிக்கோலா சார்க்கோசியின் வீடு அலுவலகங்களில் சோதனை



**3 யூலை 2012** இல் முன்னாள் ஜனாதிபதியின் வீடும் அலுவலகமும் பிரான்சின் நிதிப்பிரிவு பொலிஸ் படையினரால் (Brigade Financière) சோதனைக்குள்ளாக்கப்பட்டது. 2007 பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது இடம்பெற்ற பணப் பரிவர்த்தனை தொடர்பாகவே இத் தேடுதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி, திருமதி லிலியான் பெத்தன்கூர் (Liliane Bettencourt) என்பவரை நேரில் இரண்டுமுறை தேர்தல் நிதி தொடர்பாக சந்தித்துள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன.

800 000 யூரோக்கள் வரையில் சட்டத்திற்கு புறம்பான முறையில் தேர்தல் நிதி பெறப்பட்டுள்ளதாக விசாரணகள் தொடர்கின்றன.

லிலியன் பெத்தன்கூர்த் உலகின் இரண்டாவது பணக்கார பெண்மணியாவார். இவர் ஒறெஅல் (Oréal) அழகுசாதன தயாரிப்புப் பொருட்களின் உரிமையாளராவார். இவருடைய சொத்து மதிப்பு 2000 கோடி (20மில்லியாட்) டொலர்கள் என 2010ம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1922ம் ஆண்டில் பிறந்த இவரின் சொத்துக்களுக்கு தற்போது மகளும் 2 பேரக்குழந்தைகளும் வாரிசுகளாக்கப்பட்டுள்ளனர்.

தேடுதல்கள் நடைபெற்ற வேளையில் முன்னாள் ஜனாதிபதி குடும்பத்தினருடன் கனடாவில் இருந்துள்ளார்.

பெறப்பட்ட நிதி முன்னாள் நிதி அமைச்சரும், UMP கட்சி பொருளாளருமான எறிக் வோர்த் (Eric Woerth) என்பவர் மூலம் ஜனாதிபதித் தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது CNCCFP ஆணைக்குழுவின் விசாரணையில் (Commission Nationale des Comptes de Campagne et des Financemernt Politique) இந் நிதிப்பரிமாற்றம் உள்ளது.




பாரிசிலிருந்து கிறனோபில் (Geronoble) சென்ற TGV புகையிரதம் 9 மணி தாமதமாக சென்றடைந்தது. ஆனி மாத இறுதி வெள்ளிக்கிழமை மாலை 19H37 இற்கு 630 பயணிகளுடன் புறப்பட்ட புகையிரதம் நடுவழியில் நின்றுகொண்டது.

எதுவித அறிவித்தலுமின்றி நாலரை மணிநேரம் தரித்திருந்த புகையிரதத்தில் மின்வெளிச்ச வசதிகளோ தண்ணீரோ இல்லாது பயணிகள் தத்தளித்திருந்தனர். SNCF எவ்விதமான அறிவித்தல்களையும் விடுக்கவில்லை. இருட்டில் திகைத்திருந்த பயணிகள் 'ரிற்றானிக்' கப்பல் நிலை வந்துவிட்டதோ என அங்கலாய்த்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க SNCF எதிர்பாராத தொழில்நுட்பக் காரணங்களால் தாமதம் ஏற்பட்டிருந்ததாகவும் பயணிகளுக்கு ஆபத்தான சூழ்நிலை எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்றும் அறிவித்துள்ளது. பிரயாணம் செய்த பயணி ஒருவர் SNCF இற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாகவும் தங்கள் நிலைமையை இட்டு புகையிரத நிர்வாகம் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

SNCF தரப்பிலிருந்து, அவர்களின் பயணச் சீட்டுக்கான பணம் நஷ்டஈடாகவும் மற்றும் பயணச்சலுகையாக பயணிகளுக்கு பாரிஸ் – கிறனோபில் சென்று வர மேலதிகமாக இருவழி இலவசப் பயணச்சீட்டும் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ❍




ஏது புதிய சேவை
தமிழ்மொழியில் தொடர்புகொள்ள: 06 50 49 23 94
TRICO INTERNATIONAL
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை உட்பட இலங்கையின் எப்பாகத்திற்கும்
எவ்வித கட்டணமுமின்றி
விநியோகிக்கப்படும்
உதாரணம்: 50Kg-100€
உங்கள் பொதிகள் உங்கள் வீட்டிற்கே விநியோகிக்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு:
www.tricofrance.com
trico@orange.fr
Trico Shipping France
20, rue du Pont à l'Huile
95500 Le Thillay
உங்கள் சகலவிதமான பொதிகளும் இலங்கை, இந்தியா உட்பட சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில் துரிதமாகவும், நம்பிக்கையாகவும் சென்றடைய இன்றே நாடுங்கள்.
Tél.: 01 34 38 92 65
09 66 43 25 43
06 77 28 01 70



# Mouss Diouf

Inspecteur N'Gume பிரெஞ்சுத் தொலைக்காட்சி நாடகமான Julie Lescaut ன் பிரபல கதாபாத்திரம். இக் கதாபாத்திரத்தை ஏற்று 1992 முதல் 2006 வரை நடித்தவர் Mouss Diouf. தொலைக்காட்சி நாடகம், சினிமா, மேடை நாடகம், One Man Show என பன்முக வெளியில் இயங்கியவர். 2006 முதல் பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த M.D தனது கொடிய வியாதியின் மூர்க்கக் கணங்களைக் கடந்து தனது 47வது வயதில் 7ஜூலை 2012 இல் மரணமடைந்தார்.

செனகலில் பிறந்த M.D தனது 3 வயதில் குடும்பத்தினருடன் பிரான்சுக்கு குடியேறியவர். ஆரம்பத்தில் மார்சேயில் வாழ்ந்த இவரின் இளமைப்பருவம் பாரிசின் புறநகர்ப்பகுதியான Bobigny இல் கழிந்தது. குத்துச்சண்டை வீரராக பயிற்சிபெற்று பல போட்டிகளில் பங்கு பெற்றவர். 2004 இலிருந்து சினிமா, நாடகத் துறையில் புகுந்த இவர் பின் One Man Show மூலமாக கலக்கினார்.



பாரிஸ்
ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின்
17வது தேர்த்திருவிழா
02.09.2012

முகவரி மாற்றம்
மொழிபெயர்ப்பாளர் – மாயவர்
V.S. Krishnapillai
புதிய முகவரி
57, Rue Louis Blanc - 75010 Paris
(சென்னை சில்க்)
Tél./Fax : 09 52 85 73 52 Mobile : 06 86 38 10 57


## பாரிஸில் பாடகி மடோனா

### நீதிமன்றம் செல்லும் லுபெனின் கட்சியினர்!



பிரபல பாடகி மடொனாவின் நிகழ்ச்சியொன்று அண்மையில் பாரிஸில் நடைபெற்றது. இதன்போது அவரது பாடலொன்றிற்கு பிரெஞ்சு ஜனாதிபதி வேட்பாளர் மரீன் லுப்பெனை விமர்சிக்கும் வகையில் உலக சர்வாதிகாரிகள், நாஜிகளுடன் ஒப்பிட்டு அவரை காட்சிப்படுத்தியிருந்தார். இதை எதிர்த்தே அக்கட்சியால் வழக்குத் தாக்கல் தொடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



## உடைக்கட்டுப்பாட்டை மீறிய பிரெஞ்சுப் பெண் அமைச்சர்.

பிரான்சிலும் உடைக்கட்டுப்பாடா? என்று பலரும் மூக்கில் விரலை வைக்கக்கூடும். இது ஆண்களுக்கும் பொருந்துமா என்பது தெரியவில்லை. ஆனால் பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் இப்படி ஒரு கட்டுப்பாடு இருப்பதாக அண்மைய தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

அண்மைய பாராளுமன்ற அமர்வொன்றிற்கு அமைச்சர் Cécile Deflot மிக உயரமான கீல்ஸ் உடன் முழங்கால் தெரியுமளவிற்கு ஆடையணிந்து சென்றிருந்தார். அவர் பேச எழுந்ததும் உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சல் எழுப்பியதால் அவர் மிகுந்த சங்கடத்துடன் பேச்சை இடைநிறுத்த வேண்டியதாயிற்று. இது போன்ற அவமானத்தை தான் தனது வாழ்நாளில் சந்திக்கவில்லை என்றும், தங்கள் மனைவிமார்களை இதுபோன்று அவமதிப்பார்களா? என்றும் Cécile கண்டனம் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் அமைச்சரவை கூட்டமொன்றிற்கு இவர் ஜீன்ஸ் அணிந்து சென்றது சபையில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கும் எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## PARIS-ST.DENIS சினிமா கலைக் கல்லூரி



பிரபல திரைப்படஇயக்குனரும் தயாரிப்பாளருமான Luc Besson இன் பாரிய முயற்சியில் Saint Denis பகுதியில் சினிமாக் கலைக் கல்லூரி ஒன்று உருவாகியுள்ளது. சினிமாவின் தொழில்நுட்பம் முதல் அத்தனை பிரிவுகளும் கற்பிக்கப்படவுள்ளது. இக் கல்லூரியின் சிறப்பம்சம் முற்றிலும் இலவசம். கல்லூரியில் சேர்வதற்கு எந்தவிதமான வேறு தராதரங்களோ, இளநிலைப்பட்டங்களோ பணமோ தேவையில்லை. மாறாக ஊக்கமும் படைப்புத் திறனும் மட்டும் இருந்தால் போதுமானது. 18 முதல் 25 வயதுள்ள எவரும் இக்கல்லூரிக்கு விண்ணப்பிக்கமுடியும். உலகின் பல பாகங்களிலிருந்தும் தொழில்முறை பேராசிரியர்கள், மற்றும் சினிமா விற்பன்னர்கள் இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கவுள்ளனர்.


லாச்சப்பலில்
சங்கீதா அச்சகம்
01 44 72 08 94

# ரூபி அச்சகம்

**IMPRIMERIE - PHOTOCOPIE**




உங்கள் மழலைகளின் வண்ண வண்ண போஸ்ரர்கள்,
மற்றும் உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய
போஸ்ரர்களை பதிப்பித்துக்கொள்ள எம்மை நாடுங்கள் !



உங்கள் வீடுகளில் நடைபெறுகின்ற
அனைத்து நிகழ்ச்சிகளையும்
நீங்கள் வீடியோ படமாக்குகின்றீர்களா?

உங்கள் விருப்பம் போல் தொழில்நுட்ப ரீதியாக
வடிவமைக்க
(எடிற்றிங் செய்ய) விரும்புகின்றீர்களா?



**எம்மை நாடுங்கள்**

**TRANSFÉRER VOS ÉVÉNEMENTS SUR DVD**

**10, Rue Labat - 75018 Paris**

**Tél/Fax: 01 42 51 80 78**

M°: Marcadet Poissonniers



HÔTEL - RESTAURANT

# AU VIEUX LOURDES

**உங்களை அன்புடன் வரவேற்கின்றது**

புனித லூர்து நகரில்
தங்குமிட வசதிகளுடன் கூடிய உணவகம்

**52, Rue du Bourg - 65100 Lourdes**

Tél.: 05 62 94 35 38 - Port : 06 11 49 26 08 (Soori)

www.vieuxlourds.com

**12 வருட சேவையில்...**

# Sky Star

குகன் : 01 46 07 73 45 - Port : 06 80 15 59 14

Vente - Récepteur Numérique - Accessoires - Installation
- Réparation LCD Plasma

சற்றலைற் பொருத்திக்கொள்ளவும்
திருத்திக்கொள்ளவும்
அனுமதி பெற்றுத்தரவும்

**எம்மை நாடுங்கள்!**

**19, Rue Cail - 75010 Paris**

M° : La Chapelle / Gare du Nord

Email : skystarsat@free.fr www.skystarsat.fr

# KALYANI PARTY SERVICE

**உங்கள் இல்ல விழாக்களுக்கு வேண்டிய பலகாரங்கள்,**
**சைவ அசைவ உணவுவகைகள், பாத்திரங்கள், வாழை இலை**
**அத்துடன் விழாக்களை சிறந்த முறையில் நடாத்தி தர**
**எம்மை நாடுங்கள்.**

# கல்யாணி விருந்து உபசாரம்







**Tél. : 01 42 58 67 11 / 06 25 12 48 03 / 06 26 49 78 29**

**10 Rue Labat - 75018 PARIS** (M° : Marcadet Poissonniers)


ஸ்ரீராம ஜெயம்
M.G. பாலகிருஷ்ணன்
[நாதஸ்வரவித்துவான்]
உங்கள்
மங்கள வைபவங்களுக்கு
அழைத்து மகிழுங்கள்!
4 Allée Caquineau
93800 Épinay-sur-Seine
France
Tél.: 01.49.46.26.50
06.10.87.68.85
ganesubala@gmail.com


Ramanan Deco
மணவறை, மாலை, மண்டப அலங்காரம்
மற்றும் உங்கள் வைபவங்களுக்குத் தேவையான
அனைத்து ஒழுங்குகளும் செய்து தரப்படும்
Tel : 06 62 60 15 74


பாரதி விலாஸ்
இலங்கை இந்திய உணவகம்
உங்கள் அனைத்து வைபவங்களுக்கும் தேவையான
சிற்றுண்டி வகைகள் - உணவு வகைகள்
தரமாகவும், விரைவாகவும் விநியோகம் செய்யப்படும் !
தாயகத்து உணவுகளின் மகத்துவம்
அதுவே எமது உணவகத்தின் தனித்துவம்
56, Rue Philippe de Girard - 75018 PARIS M°: La Chapelle
Tél. : 01 40 37 12 78 - Portable : 06 16 50 04 41


M.G.A Coiffure
M.G.A COIFFURE
Tél.: 06 66 66 06 13
20, Rue Roger Salengro - 93700 Drancy
En face de Centre des Finances Publiques[Bus: 146, 148 - Arrêt : Georges Ducert, Danton]


சங்கீதா அச்சகம்
IMPRIMERIE - PHOTOCOPIE
உங்கள் வைபவங்களிற்குத் தேவையான
அழைப்பிதழ்கள், பலகார, பரிசுப் பைகள்,
கேக் பொக்ஸ் போன்றவற்றை
புதிய டிசைன்களில் சிறந்த முறையில்
அச்சுப் பதிப்பதற்கு எம்மை நாடுங்கள்
உங்கள்
மனங்கவரும்
அழைப்பிதழ்கள்
1€
500 இற்கு
மேற்பட்ட
மொடல்களில்..
39, Bld de la Chapelle - 75010 PARIS
Tél / Fax: 01 44 72 08 94
M°: La Chapelle / Gare du Nord
www.nilafrance.com



# தாராள மனமும், பரந்த மனப்பான்மையும் கொண்டவர்களா பிரான்ஸ் மக்கள்?

இது தொடர்பாக இரண்டு அமைப்புக்கள் ஆராய்ந்து தகவல் வெளியிட்டுள்ளன.

பிரான்சில் ஐந்து பேருக்கு ஒருவர் தான் கஸ்ட நிலைமையில் உள்ளவர்கட்கு உதவுகின்றனர். தாராள மனப்பான்மைகொண்ட ஒரு பிரெஞ்சியர் வருடாந்தம் 75 யூரோக்கள் வரை மற்றையோருக்கு உதவுகின்றார்.

ஆய்வின்படி பிரெஞ்சுக்காரர் 22வீதத்தினர் உதவி செய்யும் போது 82வீத அமெரிக்கர்கள் கஸ்டநிலையில் உள்ளவர்கட்கு உதவுகின்றனர். ஆங்கில மொழி பேசும் நாடு களில் சமூக மானியங்கள் வழங்குதல் குறைவாக இருக்கின்றபடியால் மக்களே அங்கு அமைப்புக்களை ஏற்படுத்தி கஸ்ட நிலையில் உள்ளவர் கட்கு உதவுகின்றனர்.

பிரெஞ்சுக்காரர் தாங்கள் தங்கள் வரி செலுத்திவிட்டால் போதும் என்ற மன நிலையில் இருக்கின்றனர். இந்த விடயத்தில் அமெரிக்கர் மாத்திரம் பிரெஞ்சுக்காரருக்கு முன்னால் இல்லை. கொசோவோ, கௌதமாலா, ஹெய்டி போன்ற நாடுகள் கூட பிரான்ஸ் நாட்டிற்கு முன்னால் உள்ளன. இவ்வாறு World Giving Index 2011 தெரிவிக்கின்றது.

உதவுவதில் உலக அளவில் பிரான்ஸ் 64ம் இடத்தில் இருக்கின்றது. நலன்புரிச் சங்கங்களில் பிரெஞ்சுக்காரர் 22 வீதத்தினரே பங்குகொள்கின்றனர். 4வீதத்தினர் மாத்திரமே இரத்ததானம் செய்கின்றனர். இவ்வாறு மனித நேய ஆய்வு நிறுவனம் தெரிவிக்கின்றது.

2010ம் ஆண்டில் பிரெஞ்சுக் காரர் 3.70 மில்லியாட் யூரோக்களை உதவியாக வழங்கி யுள்ளனர். இதில் 50 வயதிற்கு குறைந்தவர்கள் கொடுத்த நிதி 30 வீதமாகவே உள்ளது. மீதி 70 வீதம் 50 வயதிற்கு மேற்பட்டவர்களாலேயே வழங்கப்பட்டுள்ளது.




OSMOSE

**பிரான்சில்**

## நவீனமுறையில் வடிவமைக்கப்படும் பஸ் தரிப்பிட நிலையங்கள்

பாரிஸ் நகரை அலங்கரிக்கவிருக்கும் புதிய பேருந்து தரிப்பிட நிலையங்களின் மாதிரி வடிவம் Gare de Lyon - Diderot தரிப்பிடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. தற்போதைய தரிப்பிடங்ளிலும் பார்க்க இவை 13 மடங்கு பெரியவை. அங்கவீனமான பயணிகளை கருத்திற்கொண்டு 85m² இல் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் புதிய பல தொழில்நுட்ப வசதிகளுடனான 4 பாரிய திரைகளில் போக்குவரத்து நெரிசல் நிலை முதற்கொண்டு பலவிதமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். Wifi Internet தொடர்புகளும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

'Osmose' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த பஸ் தரிப்பிடங்கள் கட்டட வடிவமைப்பாளர் Marc Aurel இனரால் வடிவமைக்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் வரை நீங்கள் நேரில் சென்று இப்புதிய தரிப்பிடத்தை பார்வையிடலாம்.

# வெள்ளிச்சுவாசம்

எந்தவிதமான எண்ணங்களுமின்றி நாங்கள் சுவாசிக்கிறோம். ஆனால், எங்களது இந்த எண்ணங்களும் சுவாசிக்கவேண்டுமே. சிறந்த உடலாரோக்கியத்திற்கு சுத்தமான காற்றினைச் சுவாசிப்பது அவசியம் என்ற விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் 'வெள்ளிக்கிழமைச் சுவாசம்' என்றதொருசிறப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைய பிரான்சினது பிரதான எட்டு நகரங்களில் வசிப்பவர்கள் எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது சுவாச மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். மக்கள் தாங்கள் எத்தகைய காற்றினைச் சுவாசிக்கவேண்டும்



என்ற சரியான விளக்கத்தோடு செயற்படுவது சிறந்த உடல் ஆரோக்கியத்திற்கு அவசியம். குறிப்பாக புகைப்பழக்கத்திற்கு ஆளானவர்கள், 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் காற்றில் மாசு அதிகமிருக்கும் பகுதி களில் வசிப்பவர்கள் இது விடயம் தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும் என்கிறார்கள் வல்லுநர்கள். இது தவிர சுவாசம் மற்றும் நரம்புசார் பிரச்சினையுடையவர்கள் தாங்கள் சுவாசிக்கும் காற்று தொடர்பாக அதியுச்ச கவனம் செலுத்தவேண்டும். அண்மைய புள்ளிவிபரத்திற்கு அமைய, ஒவ்வொரு ஆண்டும்

## பிரான்சில் அஸ்மா நோய் ஆயிரம்பேரின் உயிர்களைக் காவுகொள்கிறது.

நாள்பட்ட நுரையீரல் நோயினால் 16000 பேர் மரண மாகிறார்கள் என்றறியப்படுகின்றது. புகைப்பிடிக்கும் பழக்கம்தான் இதுபோல ஆயிரக்கணக்கானோர் மரணமடைவதற்கான அடிப்படைக்காரணம்.



## உலக அழகிப் போட்டியில் பிரான்சின்
## Delphine Wespiser

2012 இன் Miss France ஆன Delphine Wespiser ஒகஸ்ற் 2012இல் சீனாவில் நடக்கவுள்ள உலகஅழகிப்போட்டி - 2012 இலும், டிசெம்பரில் நடக்கவுள்ள 61வது Miss Universe - 2012 இலும் பிரான்ஸ் சார்பாக கலந்துகொள்ளவுள்ளார். 2009 இல் Chloé Mortaud பிரான்ஸ் சார்பாக உலக அழகிப் போட்டியில் பங்குபற்றி இறுதிச் சுற்றுவரை வந்திருந்தார். அவரை தொடர்ந்து 3 வருடங்களின் பின் Delphine Wespiser பங்குபெறுகின்றார்.

## கவலைகள் ஒருபோதும் வெற்றியைத் தருவதில்லை முயற்சிகளே!!



## அதிகளவான நேயர்களை தன்வசம் ஈர்த்த



2011 நவம்பர் - டிசம்பரில் நடந்த கணிப்பு பிரான்சில் 43.366 கோடி மக்கள் நாளொன்றிற்கு ஒரு தடவை எனினும் வானொலி கேட்கின்றனர் என்கின்றது.

கடந்த ஏப்ரல்-யூன் வரை யான காலப்பகுதிகளில் அதிகளவான வானொலி நேயர்களைக் கொண்டிருந்த வானொலி தொடர்பான தரவின்படி NRJ Music அதிக நேயர்களை தன்பால் ஈர்த்துள்ளது. இதுவரை காலமும் முன்னணியில் இருந்துவந்த RTL வானொலியை புறந்தள்ளியிருக்கிறது NRJ Music. இந்தக் காலப்பகுதியில் NRJ Music 6.16கோடி(வானொலிகேட்போரின்11.7வீதம்பேர்) நேயர்களை நாளொன்றிற்கு கொண்டிருந்தது. 5இலட்சத்திற்கும் அதிகமான நேயர்களை NRJ ஈர்த்துக்கொள்ள RTL(6.06 கோடி) தனது 160000 நேயர்களை இழந்து நிற்கின்றது.

தேர்தல் காலப்பகுதியில் தாம் முன்னிலைக்கு வந்தது பெருவெற்றியென NRJ கருத்து தெரிவித்தி ருந்தது. எனினும் RTL இன் தலைவர் மக்களின் அரசியல் ஆர்வ குறைவும், பொழுதுபோக்கினை நாடும் தன்மை அதிகரிப்புமே தாங்கள் நேயர்களை இழந்தமைக்கான காரணம் என்கின்றார்.

கணிப்பின்படி France Inter வானொலி தொடர்ந்து 3வது இடத்தில் (5.77 கோடி) உள்ளது. எனினும் France Inter வருடா வருடம் 4இலட்சம் மேலதிக நேயர்களை பெறுகின்றது.

அதிக நேயர்கள் வரிசையில் France Info நான்காம் இடத்திலும் Europe 1 ஐந்தாம் இடத்திலுமுள்ளது.

> அபிப்பிராய வேற்றுமைகளுக்காக நான் ஒரு மனிதனை விட்டு விலக மாட்டேன், அவனுடைய முடிவைக் கண்டு கோபமடையவும் மாட்டேன்.
> ஏனெனில் நானே சில நாட்களுக்குப் பிறகு என் கருத்துகளுக்கு எதிராக முடிவு செய்யவும் கூடும்.
> - தாமஸ் ப்ரௌன்



## நேர்மைக்கு கிடைத்த பரிசு

பிறேசிலிலுள்ள Sao Paulo இல் பாலம் ஒன்றின் கீழ் வீடற்று அனாதரவாக வாழ்ந்து வந்தவர்கள் தான் Santos - Sandra தம்பதியினர். ஒரு நாள் அதிகாலை 3.30 மணி. அருகிலிருந்த Sushi உணவகத்தின் அபாய மணி கேட்டு திடுக்குற்று வெளிச்சென்ற இவர்கள் ஓர் அதிசயத்தைக்கண்டனர்.

வழியில் மரமொன்றிற்கடியில் இரு பைகள். அவற்றுள் பணத்தாள்கள், நாணயங்கள், வங்கிக்கடன் பற்றுச் சீட்டுக்கள்.. அவர்கள் ஒருகணமும் தாமதிக்கவில்லை. பொலிசாரை அழைத்து அவர்களின் உதவியுடன் பணத்தை (10000 அமெரிக்க டொலர்) உரியவரிடம் சேர்ப்பித்தனர்.

Sushi உணவகத்தின் யன்னல்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த முழுப்பணமும் திருடப்பட்டிருந்தது. திருடர்கள் மறைவாக அப்பணத்தை வைத்துவிட்டு மீண்டும் வந்து எடுக்கலாம் என்ற எண்ணத்திலேயே அவ்விடத்தில் விட்டுச் சென்றிருக்கின்றனர் என்கின்றனர் பொலிசார்.

'இது மிக அதீத நேர்மையான செயலே. நாங்கள் இந்த தம்பதியர்க்கு மிக நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்' என்று பாராட்டிய உணவக உரிமையாளரில் ஒருவர் அவர்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளை ஒழுங்குசெய்து கொடுத்தார். அத்துடன் இவர்களின் நேர்மைக்கு பரிசாக தங்களது தொழிற்தளங்களில் வேலை கொடுப்பது அல்லது நீண்டகாலமாக பிரிந்திருக்கும் குடும்பத்துடன் இணைவதற்காக மேற்கு பிரேசில் செல்வதற்கான இரு பயணச் சீட்டை பெற்றுக் கொடுப்பது என முன்வந்துள்ளனர்.

இவர்களின் அதீத நேர்மையை பிரேசிலின் பல தேசிய தொலைக்காட்சிகள் பாராட்டியிருந்தன. 'என் தாயார் திருட-வது கூடாது என்றும் யாராவது திருடிய தைப் பார்த்தால் பொலிசிற்கு அறிவிக்கும் படியும் கூறி என்னை வளர்த்திருந்தார். இத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்தால் தன் மகன் நேர்மையான மனிதன் என பெருமிதம் கொள்வாள்' என்கிறார் Santos.

*பொன்னியின் பக்கம்*

## அச்சம் தரும் பற்துாரிகை!



பற்களை பராமரிப்பதற்கு ஒரு நாளில் மூன்று தடவைகள் பல்துலக்கும் படி நாம் ஆலோசிக்கப் படுகின்றோம். ஆனால் பற்களை சுத்தம் செய்யும் அந்த தூரிகை களை நாம் சுத்தமாக வைத்திருக்கின்றோமா? உங்கள் மலசலகூடமும் குளியலறையும் இணைந்திருப்பின்.. **எச்சரிக்கையாக இருங்கள்!**

உங்கள் மலகூடத்தை மூடாமல் நீங்கள் தண்ணீரை அழுத்தும் போது மலகூடத்தில் உள்ள அத்தனை கிருமிகளும் உங்கள் குளியலறை முழுவதும் பரவிவிடுகின்றது. சாதாரணமாக நமது பற்துாரிகைகளில் **10 மில்லியன் நுண்ணுயிர்கள்** உள்ளன. பெரும்பாலான எமது வீடு களில் எல்லோருடைய தூரிகைகளையும் நாம் ஓரிடத்தில் வைக்கின்றோம். பல்வேறு வகையான நுண்ணுயிர்கள் குடியிருக்கும் நமது தூரிகை அவற்றிற்கான உணவு நீரை வழங்குவதுடன் இனப்பெருக்கமடைந்து நமது உடலில் புகுவதற்கான வாயிலாகவும் உள்ளன.

உங்கள் தூரிகைகளை பாதுகாப்பது எப்படி?

1. நன்றாக கழுவுங்கள்
2. ஒவ்வொருமுறை பயன்படுத்தியபின்பும் உலரவிடுங்கள்
3. மூடப்பட்ட இடங்களில் அவற்றை வைக்காதீர்கள்
4. தடிமன் அல்லது காய்ச்சல் வந்ததும் உங்கள் தூரிகையை மாற்றுங்கள்!

இதைவிட, நம் நாட்டு பற்பொடியே பரவாயில்ல போலிருக்கே!!

சின்னட்டிக்கதை

# அழகிய பூக்கள்..



அந்தப்பாடசாலையின் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கத்ரின் சிலநாட்களாகவே சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார். மெலனியின் சிக்கலை அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அவருடைய முப்பதுவருட ஆசிரியத்தொழில் அனுபவத்தில் அவருக்கு இது புதிராகவும் இருந்தது. ஆசிய நாட்டுக் குழந்தைகளின் உளச்சிக்கல்களை அவர் ஓரளவுக்கு புரிந்திருந்தாலும் மெலனி அவருக்கு கஸ்டமாகவே தோன்றினாள்.

மெலனி அதிகம் பேசமாட்டாள். அப்பாவியாக முகத்தைத் தொங்கப்போட்டபடி இருப்பாள். மெலனியின் வாடியமுகமும், சோர்ந்து விழும்தோற்றமும் கத்ரினுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது.
மெலனியின் உதட்டிலிருந்து எப்போதாவதுதான் வார்த்தைகள் வந்து விழுந்தன. இதுவும் அவளைப்புரிந்துகொள்ள அவருக்கு கடினமாக இருந்தது.



அதிலும் கடந்த மூன்று மாதத்துள் அதிகம் சோர்ந்தெழுந்தாள். மெது மெதுவாக கதைத்தெடுத்ததில் அவளுக்கு ஒரு சின்னத்தங்கச்சி பிறந்திருப்பதாகவும், இரவுநேரங்களில் அவளின் கீச்சலும் அழுகையும் மெலனியை குழப்பி நித்திரை கொள்ளமுடியாமல் அவதிப்படுகிறாள் என்பதையும் அவரால் ஊகிக்க முடிந்தது.
பொதுவாகவே மூன்று வயதுக்குழந்தைகள், தங்களுடைய பாசத்தைப் பங்குபோட்டுக்கொள்ள வீட்டுக்குள் ஓர் புதிய உயிரினம் வந்துசேர்வதை தங்கள் மனதுக்குள் அங்கீகரிப்பதில்லை. இந்நிலை மாற்றம் எடுக்க அவர்களுக்கு நாளெடுக்கும். மெலனியின் இயல்பான சுபாவத்துடன் இந்த உளவியல் பிரச்சினையும் அவளை வாட்டி எடுப்பதை கத்ரின் உணர்ந்து கொண்டார்.

இரண்டு மூன்று தடவைகள் பெற்றோரைக் கூப்பிட்டுக் கதைத்தும் பார்த்தார். விடயங்களை பெற்றோர் புரிந்துகொள்ளும்பாங்கு அவருக்கு இன்னும் கவலையைக் கொடுத்தது. அவர்கள் தங்கள் பிள்ளையில் ஆசிரியர் குறைகாண்பதாக கவலை கொண்டார்கள். கத்ரினுக்கு நிலைமை இன்னும் கடினமாகியது.

ஆனாலும் கத்ரின் ஓய்ந்துவிடவில்லை. மீண்டும் ஒருமுறை மெலனியின் அம்மாவை அழைத்து பௌத்திரமாக கதைத்துப்பார்த்தார்.
மெலனி இப்போதெல்லாம் முன்புமாதிரியில்லை. நன்றாக கதைக்கிறாள், நன்றாக படிக்கிறாள். மதிய உணவுக்குப்பின்னர் பாடசாலை ஒழுங்குமுறைப் பிரகாரம் அவளை படுக்கவைத்து இன்னும் கொஞ்சம் கவனமெடுத்தால் அவள் இன்னும் மேல்நிலைக்கு வந்து விடுவாள் என்று சொல்லிப்பார்த்தார்.
அம்மாவோ கோபம் கொண்டவராக 'சீ... சீ.. அதெல்லாம் தேவையில்லை. வீட்டில நான் சும்மாதான் இருக்கிறன் என்ர பிள்ளைக்கு சாப்பாடு குடுக்க என்னால முடியும். என்ர அம்மா என்ன இப்பிடித்தான் வளத்தவ' என்று மறுத்துவிட்டார்.
கத்ரினுக்கு முகம் கறுத்துவிட்டது.

அது ஒரு இடைவேளை நேரம். பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்திற்கும் திரும்பவில்லை. மணி அடித்து பிள்ளைகளை கூப்பிடப்போன கத்ரின் மெலனியையும் கண்டுவிட்டார். அவள் உற்சாகமாக ஓடிக்கொண்டிருந்தாள்.
மெலனியின் சந்தோசத்தைக் குலைக்க அவர் விரும்பவில்லை. அன்று வழமைக்கு மாறாக சற்று தாமதமாகவே அவர்களை வகுப்பிற்கு அழைத்தார்.
ஆனாலும் வகுப்பில் மெலனி வழமைபோலவே இருந்தாள்.

இன்னொரு இடைவேளையிலும் அப்படித்தான் நடந்தது. பிள்ளைகள் பூமரத்தில் பூக்களை பிய்த்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்தமாத்திரத்தில் கத்ரினுக்கு கோபம் வந்துவிட்டது. ஏ..ய்! ஏ..ய்! என்று கத்திக்கொண்டு போன கத்ரின் கிட்டப்போனதும் மெலனியைக்கண்டுவிட்டார். பூக்களை கொய்து விளையாடுவதில் மெலனியே முதலாளாய் இருந்தாள். ஒரே நேரத்தில் இரண்டுபூக்களையும் வாடச்செய்ய அவரால் முடியவில்லை. கத்ரின் சாந்தமானார். மெதுவாக அவர்களுக்கு கிட்டச்சென்று புன்முறுவல் செய்தார். பின் மெதுமெதுவாக உதிர்ந்த பூக்களை கையிலெடுத்தார். பாருங்கள்! இவை எவ்வளவு அழகான பூக்கள்! வாடிப்போகப்போகின்றன. அவைகளும் எங்களைப்போலவே. எங்களைப் போலவே அவைகளுக்கும் வலிக்கும் என்றபடி பூக்களை மென்மையாக வருடிக் கொடுத்தார். இதைச்சொல்லும் போது மெலனி வருத்தப்பட்டுவிடக் கூடாது என்பதிலும் அவர் அவதானமாக இருந்தார். மெலனியை அதிகம் பார்வையால் நேர்படாமலே கதைத்துக்கொண்டிருந்தார்.

மெதுமெதுவாக மெலனி அசைந்தாள். கத்ரினின் பார்வைபடாமலே அவருக்கு கிட்டவந்தாள். மெதுவாக கத்ரினின் கையைப்பற்றினாள். கத்ரினுக்கு ஆச்சரியம்! பேசுவதை நிறுத்தி மெலனியைப் பார்த்தார். அவள் ஏதோ சொல்லப்போகிறாள் என்ற மகிழ்ச்சி பொங்க ஆவலோடு காதைக் கூர்மையாக்கினார் கத்ரின்.
ஆனால், அவள் எதுவும் பேசவில்லை.
பற்றிய விரல்களில் மெதுவாய் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு புன்சிரிப்போடு குனிந்தபடி மெல்ல நகர்ந்தாள் மெலனி.
கத்ரினின் இதயம் ஒரு கணம் விம்மிப்புடைத்தது.
கண்கள் முட்டின.

– அசோகா –

# நாங்கள் ஆடைகளைத் துறப்பது சமூகம் சார் தடைகளை உடைப்பதற்கே!

பொது இடங்களில் தங்களது ஆடைகளைக் களைந்துவிட்டு சுதந்திரமாகத் திரியவேண்டும் என வாதாடும் அல்லது அவ்வாறு செயற்பட்டுவரும் 11 மில்லியன் பேர் பிரான்சில் இருக்கிறார்கள். இவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கென 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுதான் இயற்கையியலுக்கான பிரெஞ்சுக் கூட்டமைப்பு. இந்த அமைப்பானது பிரான்சினது சுற்றுலா மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் பெரும் பிரசார நடவடிக்கை ஒன்றைத் தற்போது முன்னெடுத்துள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் naturisteparnature.fr இணையத்தளத்தின் ஊடாக இதுபோன்ற சுற்றுலாப்பயணிகளைக் கவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. பிறந்த மேனியுடன் சுதந்திரமாகத் திரிவதற்காக 115 பிரத்தியேக மையங்கள் இதுவரை பிரான்சில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கான இந்த மையங்களில் உணவு விடுதிகள், சுற்றுலா விடுதிகளும் தற்போது அமைக்கப்பட்டு வருவதாக இயற்கையியலுக்கான பிரெஞ்சுக் கூட்டமைப்பின் பேச்சாளர் Frederic Chandelier கூறுகிறார். அத்துடன் குறித்த சில மையங்கள் உடற்பயிற்சி மையங்களைக்கூடக் கொண்டிருக்கிறது. இவை தவிர விளையாட்டு, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இந்த மையங்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது. சுற்றுலா மேம்பாட்டு நிறுவனத்தின் தகவலின்படி 2011ஆம் ஆண்டு பிரான்சில் இதுபோல பிரத்தியேக இடங்களில் ஆடைகளைக் களைந்துவிட்டு சுதந்திரமாகத் திரியவிரும்புபவர்களின் எண்ணிக்கை நான்கு சதவீதத்தினால் அதிகரித்திருக்கிறது. இன்றைய தலைமுறையினர் மேலும் மேலும் இயற்கையுடன் ஒன்றிவாழுவதற்கே விரும்புவதுதான் அதிகம் பேர் இயற்கையியலை நாடுவதற்கான காரணம் என்கிறார் Frederic Chandelier.



இதுபோல தாங்கள் ஆடைகளைத் துறப்பது சமூகம்சார் தடைகளை உடைப்பதாகவும் தங்களுக்கிடையே நட்பினை அதிகரிப்பதற்கு வழிசெய்வதாகவும் இவர்கள் மேலும் கூறுகிறார்கள்.

## விடுமுறையில் நீங்கள் செல்லும்போது உங்கள் வீட்டைப்பாதுகாக்க சில வழிவகைகள்



**நீங்கள் உங்களின் விடுமுறைக்காக வெளியிடங்களுக்குப் பயணிக்கும்போதுதான் திருடர்கள் அதிகம் தங்களின் கைவரிசையினைக் காட்டுகிறார்கள்.**

கதவுகளை இறுகப் பூட்டிவிட்டு, யன்னல் திரைகளையும் மூடிவைத்து நாங்கள் வீடுகளில் இல்லை எனப் பறைசாற்றுவதால்தான் அதிக களவுகள் இடம்பெறுகின்றன. ஐயோ வீட்டில் திருடர்கள் புகுந்துவிடுவார்களே என்ற அச்சம் இல்லாமல் விடுமுறையினை முழுமையாக, நிம்மதியாக நீங்கள் அனுபவிப்பதற்கான வழிகள்தான் என்ன?

❍ முதலாவதாக, வீட்டில் யாரோ இருக்கிறார்கள் என்ற எண்ணம் பார்ப்பவர்களுக்கு ஏற்படும் படி செய்யுங்கள்.

❍ தொலைக்காட்சியும் வானொலியும் குறிப்பிட்ட நேரங்களில் தானாக இயங்கும்படியும் குறிப்பிட்ட நேரத்திற்கு நிற்கும்படியும் செய்துவிடுங்கள்.

❍ உங்கள் வீட்டு வாசலில் யாராவது வந்து நின்றால் வாசலிலுள்ள மின்விளக்கு தானாகவே ஒளிரும்படியான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். இதற்கான இலத்திரனியல் உபகரணங்களை மிகவும் குறைந்த விலையில் சந்தையில் நீங்கள் பெறலாம். இதுபோல வீட்டில் யாரோ இருக்கிறார்கள் என பார்ப்பவர்கள் நம்பும்படி எதையாவது நாம் செய்யலாம்.

❍ உங்கள் வீடு மாடிகளைக் கொண்டதாக இருந்தால் மேல்மாடியின் ஜன்னல்களை எந்தவித அச்சமுமின்றித் திறந்தே விடுங்கள்.

❍ உங்களிடம் இரண்டு கார்கள் இருந்தால் அவற்றில் ஒன்றையாவது நீங்கள் வழமையாக நிறுத்துமிடத்தில் நிறுத்திவையுங்கள்.

❍ பல்கனியில் நீங்கள் உடை காயவிடும் இடத்தில் உடுப்புகள் சிலவற்றைத் தொங்கவிடுங்கள்.

❍ வீட்டுத் தொலைபேசியில் ‘நாங்கள் குறித்த இந்தத் திகதிகளில் விடுமுறையில் இருப்போம்’ என்ற செய்தியைச் சேமித்துவிடவேண்டாம். திருடர்களும் அதிக சாமர்த்தியத்துடன்தான் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடவேண்டாம். வீட்டில் யாரோ தினமும் இருக்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதற்கு முடிந்தவரை அனைத்தையும் செய்யுங்கள்.

❍ தினமும் காலையில் உங்கள் வீட்டு ஜன்னல்களின் சட்டர்களைத் திறப்பதற்கும் மாலையில் மூடுவதற்கு உங்கள் அயல் வீட்டாரின் உதவியை நாடுங்கள்.

❍ அயல் வீட்டாரின் உதவியுடன் உங்களின் கடிதப்பெட்டியில் கடிதங்களை அப்புறப்படுத்துங்கள். நிறைந்திருக்கும் கடிதப்பெட்டிகள் திருடர்களைக் கவரும் இன்னொரு அம்சம்.

❍ நீங்கள் விடுமுறையில் செல்லும்போது பொலிசாருக்கும் தபால் நிலையத்திற்கும் அறிவியுங்கள். உங்களின் விடுமுறை நாட்களில் உங்களுக்கான கடிதங்களை தபால் நிலையத்தின் ஊடாக உறவினர்களின் முகவரிக்கு மாற்றிவிடலாம்.

நிம்மதியான விடுமுறைக்கு இவை உதவலாமென பிரெஞ்சுப்பத்திரிகையொன்று ஆலோசனை வழங்குகிறது. ●

# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்

### Bac பரீட்சையில் 'குதிரை' ஓடியவருக்கும் பெரும் தண்டனை

பிரான்சில் 12 ஆம் பரீட்சையான 'பாக்' இவ்வாண்டும் வழக்கம் போல் ஜூனில் நடைபெற்றது. இடம்பெற்ற கணிதபாடப்பரீட்சையின் போது, ஒரு பரீட்சார்த்திக்காக இன்னொருவர் 'குதிரை' ஓடவந்தார். பரீட்சார்த்தியாகத் தோற்றுபவர் 23 வயதுடைய தனிப்பட்டநிலை விஞ்ஞானத்துறைமாணவர். 'குதிரை' ஓடவந்தவர் கணித வியல் துறையில் முதுமானியாக இருக்கும் 25 வயதுடைய பல்கலைக் கழக மாணவர். இச்சம்பவம் றென் நகரத்தில் தனியார் கல்லூரியான திரு இருதயக் கல்லூரியில் - Lycée privé du Sacré-Cœur இடம்பெற்றது. அடையாள அட்டை சோதனையில், காண்பிக்கப் பட்ட அட்டை நிழற் படத்துக்கும்



பரீட்சார்த்தியின் நிழற்படத்துக்கும் வேறுபாடு காணப்பட்டதனால் போலிப்பரீட்சார்த்தி தடுக்கப்பட்டார். ஆள்மாறாட்டம் செய்தமை கையும் மெய்யுமாகப் பிடிபட்டதனால் 'மின்னல்வழியாகப் பாயப்போவதாகப்' பயமுறுத்தி கழியலறைக்குள் இந்நபர் புகுந்து கொண்டார். பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். போலிப்பரீட்சார்த்திக்கு ஒருவருட சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்படலாம். ஆனால், உண்மைப் பரீட்சாத்திக்கு ஐந்து ஆண்டுகளுக்கு பரீட்சை எழுதத் தடை விதிக்கப்படுவதற்கு சட்டம் உள்ளது.

இவ்வாறான ஆள்மாறாட்டம் செய்யும் கைங்கரியங்கள் எல்லா இடங்களிலும் இலைமறைகாய் போல் இடம்பெறுகின்றன அண்மையில் புதுச்சேரி கல்விஅமைச்சரும் ஆள்மாறாட்டம் செய்து +2 தேர்வு எழுதியமை பிடிபட்டதனால் அவரின் மந்திரிப்பதவியும் பறிபோனது. 'குதிரை' ஓடியவருக்கும் ஆசிரியர் வேலை இல்லாமற் போனது.



### கடத்தப்பட்ட பெருந்தொகைப் பெண்கள் மீட்பு

சீனாவில் கடத்தப்பட்டு அங்கோலாவுக்கு அனுப்பப்படவிருந்த சிறுவர்களையும் பெண்களையும் சீனப் பொலிசார் மீட்டனர். பாலியல் வணிகத்திற்காக 8660 சிறுவர்களும், 15458 பெண்களும் அனுப்பப்படுவதற்காக மறைவாக வைக்கப்பட்டிருந்த தகவல் அறிந்த பொலிசார் குறித்த இடத்திற்கு விரைந்து அவர்களை மீட்ட சம்பவம் சன்டுங் பகுதியில் இடம்பெற்றது. சிறுவர்களைக் கடத்தி குழந்தை இல்லாத தம்பதியருக்கு குறைந்தது 8000 டாலருக்கு விற்பனை செய்வது, வறுமையான பெண்களை பண ஆசை காட்டி கடத்திச் சென்று முதலீடு இல்லாத பணம் கொழிக்கும் வியா பாரமான விபச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துவது ஆகிய ஆட்கடத்தல் வியாபாரம் சீனாவில் பரவலாக நீண்டகாலமாக நடந்துவருகின்றது. இவ்வாறான வியாபாரத்தில் ஈடுபட்ட 11300 ஆண்களையும் 3200 ஆட்கடத்தல் குழந்தைகளையும் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

### பிரெஞ்சிய அறிஞர்களும் தமிழ் வளர்த்திருக்கின்றார்கள்

சமணர் வளர்த்த தமிழ், கிறீஸ்தவர் வளர்த்த தமிழ், இஸ்லாமியர் வளர்த்த தமிழ், ஐரோப்பியர் வளர்த்த தமிழ் எனும் சொல்லாடல்கள் வழங்கப்படுகின்றன.

பிரெஞ்சியர்களும் தமிழ் வளர்த் திருக்கின்றார்கள். 1868 இல் P.Perreaux எனும் ஆசிரியர் Collège de France மாணவர்கள் தமிழ்கற்க சிறிய நூலொன்றை வெளியிட்டிருக்கின்றார். 1889 இல் Marinet எனும் பேராசிரியர் தமிழ் இலக்கணத்தை பிரெஞ்சில் எழுதியிருக்கின்றார். பிரெஞ்சுப் பல்கலைக்கழகத்தில் INAL CO வில் தமிழ் புகட்டியவர் களில் முன்னோடியானவர் Julvel Vinson. இவர் எழுதிய தமிழ்நூல் 1903இல் வெளியானது. M.J. Baulez பாதிரியார் பிரெஞ்சியர்களுக்கு பேச்சுத்தமிழ் பற்றிய நூல் எழுதி வெளியிட்டார். பாதிரியார்களான Musset உம் Dupuis உம் இணைந்து தமிழ்–பிரெஞ்சு, பிரெஞ்சு–தமிழ் அகராதிகளை உருவாக்கம் செய்தார்கள். பரிபாடலை பிரெஞ்சில் மொழிபெயர்த்த அறிஞர் François Gros 1992 இல் திருக்குறள் – காமத்துப்பாலை பிரெஞ்சில் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறார். இவருக்கு முன்பு திருக்குறள் பிரெஞ்சில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது.


SACHCHI EDUCATION

முன்னேற்றம் உறுதி! Progrès Assuré!

1. RÉUSSISSEZ VOS PRÉPAS

எஞ்சினியர் ~ டாக்டர் ~ மருந்தாளர்

École d'Ingénieurs - Médecine – Pharmacie

பிரான்சில் மேற்படி பட்டப்படிப்புக்களுக்குரிய பாடங்களை திறமையான பிரெஞ்சுப் பேராசிரியர்கள் கொண்டு முறையாக வழிகாட்டியும் பயிற்சிப்படுத்தியும் எஞ்சினியர், மருத்துவர், மருந்தாளர் ஆகியவற்றின் போட்டிப்பரீட்சைகளுக்குத் தயார் படுத்தியும் சித்தி பெற துணைபுரிகிறோம்.

OBJECTIFS:

- Organiser le travail.
- Surmonter les problèmes méthodologiques.
- Affronter l'épreuve, concours ou examen, avec motivation et confiance.

2. SOUTIEN SCOLAIRE டியூசன் வகுப்புகள்

ÉCOLE : GS, CP, CE1, CE2, CM1, CM2, CLIN...

COLLÈGE : 6e, 5e, 4e, 3e, SEGPA...

LYCÉE : Seconde, Première, Terminale, BTS...

BAC : S,ES,L, STI, STAV,ST2S, STL,STG. ... Pro.

அனைத்துப்பாடங்களும் பிரெஞ்சு ஆசிரியர்கள் Toutes les matières scolaires

Sachchi Education (Annamalai University)

70, rue Philippe Girard - 75018 Paris Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12

# பிரான்சின் முதலாவது மகா செல்வந்தர் உலகின் ஐந்தாவது மகா செல்வந்தர் ஆனார்



Bernard Arnault

உலகின் முதல் இருபது மகா செல்வந்தர்களின் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டியல் வரிசையில் உலகின் மகா செல்வந்தர் என்ற உயர்நிலையில் இருந்த Microsoft இணை நிறுவனர் Bill Gates இப்போது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார். உலகின் முதல் மகா செல்வந்தராக Mexico Telecom உரிமையாளர் Carlos Slim வந்திருக்கின்றார்.



முதலாமவரின் சொத்து 68.5 மில்லியார்ட்ஸ் டொலர்கள். இரண்டாமவரின் சொத்து 62.4 மில்லியார்ட்ஸ் டொலர்கள். ஐரோப்பாவின் முதற்பெரிய கோடீஸ்வரராக IKEA தளபாட நிறுவனர் சுவீடன் நாட்டு Ingvar Kamprad (42.5 மில்லியார்ட்ஸ் டொலர்கள்) திகழ்கின்றார். பிரான்சின் முதற்பெரிய கோடீஸ்வரராக LVMH ஸ்தாபகர் Bernard Arnault மிளிர்கிறார். இவரின் சொத்து மதிப்பு 42.3 மில்லியார்ட் டொலர்கள். ஆசியாவின் மகா செல்வந்தராக Reliance Industry முதலாளி Mukesh Ambani இலங்குகின்றார்.



Mukesh Ambani

## பிரான்சின் முதல்பெரிய பணக்காரர்கள்

| பெயர் | சொத்து | நிறுவனம் |
|---|---|---|
| 1. Bernard Arnault (Paris) | 21240மில்லியார்ட்ஸ் | LVMH |
| 2. Gérard Mulliez (Croix) | 21000மில்லியார்ட்ஸ் | Auchan |
| 3. Liliane Bettancourt (Clichy) | 17500மில்லியார்ட்ஸ் | L'Oréal |
| 4. Betrand Puech & Hermès குடும்பம் (Paris) | 12200மில்லியார்ட்ஸ் | Hermes |
| 5. François Pinault (Paris) | 8100மில்லியார்ட்ஸ் | PPR |
| 6. Serge Dassault (Paris) | 7500மில்லியார்ட்ஸ் | Groupe Marcel Dassault |
| 7. Margarita Eric (Paris) | 6600மில்லியார்ட்ஸ் | Louis Drefus |
| 8. Pierre Castel (Blanque Fort) | 4500மில்லியார்ட்ஸ் | Catel Frères |
| 9. Main Wertheirmer (Neuilly Sur Seine) | 4500மில்லியார்ட்ஸ் | Chanel |
| 10. Vincent Bolloré (Puteaux) | 3800மில்லியார்ட்ஸ் | Bollore |


நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

Change MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

VANNI BOUCHERIE
26, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS Coiffure
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

MAJAS sarl
66, Rue Louis Blanc - 75010 Paris

மாயவர் - மொழிபெயர்ப்பு
57, Rue Louis Blanc - 75010 Paris

MGR Video
5, Rue Perdonnet - 75010 Paris

Sarl Varnisha Coiffure
11, rue de l'Ouest - 75014 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

ஜீவனா சலூான்
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SAIEE Cash & Curry
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

Restaurant Paradise
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris


## Vege Cake



**கேக்** சாப்பிட விருப்பம் தான். ஆனால் முட்டை சாப்பிடுவதில்லை என்ற ஒரே காரணத்திற்காக கேக்கையே மறக்க வேண்டியுள்ளதே என்ற கவலையா? இதோ உங்களுக்காக முட்டைக் கேக்கைவிட இன்னும் சுவையான கேக். செய்துதான் பாருங்களேன்!

தேவையான பொருட்கள் :-

மா – 500g
பட்டர் – 500g
சீனி – 4 மே. கரண்டி
ரின்பால் (500g) – 1 ரின்
கொக்கோ கோலா – ரின்பால் அளவு
பைனப்பிள் எஸ்சன்ஸ் – 1 மே. கரண்டி
கொக்கோப் பவுடர் – 4 மே. கரண்டி
அப்பச்சோடா – 1/2 மே. கரண்டி
பேக்கிங் பௌடர் – 1/2 மே. கரண்டி
கயூ, பிளம்ஸ் – தேவையான அளவு

செய்முறை :-

– முதலில் பட்டரையும் சீனியையும் போட்டு நன்றாக அடிக்க வேண்டும் (சீனி கரையும் வரை)
– அக்கலவையுடன் ரின் பாலை விட்டுக் கலக்கவும்
– ரின்பால் விட்டு நன்றாகக் கலக்கிய பின் கொக்கோ கோலாவை விட்டுக் கலக்கவும்
– மாவுடன் பேக்கிங் பவுடர், அப்பச்சோடா, கொக்கோ பவுடர் போன்றவற்றைச் சேர்த்து நன்றாக அரிக்கவும் (4 அல்லது 5 தடவைகளுக்கு மேல் அரிக்கவும்)
– அரித்த மாவை அக்கலவையுடன் சேர்க்கவும்.
– பைனப்பிள் எசன்ஸ், கயூ, பிளம்ஸ் போன்றவற்றைப் போட்டு கலக்கவும்
– 45 நிமிடங்கள் பேக் செய்து பாருங்கள். கேக் ரெடி!

சுவை மட்டுமல்ல இந்தக் கேக்கின் விசேட குணமும் உங்களுக்குத் தெரியவரும். மற்றைய Vege கேக் போன்று களித்தன்மையாகவோ, அல்லது உதிரும் தன்மையாகவோ இருக்காது. முட்டைக் கேக்கைப் போன்று மெதுவாகவும் அதைவிடச் சுவையாகவும் இருக்கும்.




நிலாவில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்புகளுக்கு
01 44 72 08 94



# பிரான்ஸ்

## புதிய சட்டசபையின் சில முன்மொழிவுகள்

பிரான்சின் பாராளுமன்றத் தேர்தல் முடிந்தபின்னர் யூன் 25இல் பாராளுமன்றம் கூடியது. இது பிரான்சின் ஐந்தாவது குடியரசின் 14வது சட்டசபையாகும். இவற்றின் சில முன்மொழிவுகள் –

நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படுகின்ற பற்றாக்குறை 2012இல் 4.5வீதமாகவும், 2013 இல் 3 வீதமாகவும் இருக்கத் திட்டங்கள் தீட்டப்படவுள்ளன. ஆனால் திட்டத்தைச் செயற்படுத்த 7 மில்லியாட் – 10 மில்லியாட் இற்கு இடைப்பட்ட தொகை மேலதிகமாக வருமானமாக பெறப்பட வேண்டும்.

இதற்காக ஜனாதிபதியினதும், பிரதம மந்திரியினதும் சம்பளம் 30வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் வருடாந்தம் 1 மில்லியன் யூரோக்களிற்கும் கூடுதலாக வருமானம் பெறுவோர் மீது 75 வீத வரி விதிக்கப்படவுள்ளது.

பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் தொடர்பான புதிய ஆலோசனைகளை அரசியல் நிர்ணய சபை தற்போதைய மந்திரி சபையிடம் ஆலோசனைக்காக சமர்ப்பிக்கும். சரத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு சட்டமூலமாக்கல் விரைவுபடுத்தப்படும். இதற்கு UMP கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்காது இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான (Allocation de rentrée) உதவுத்தொகை 25 வீதத்தினால் அதிகரிக்கப்படும். அத்துடன் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு 60000 பயிற்சியாளர்களும் ஆசிரியர்களும் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

கூடுதலான வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்து முகமாக தொழில் அதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும். புதிய சட்டமூலங்கள் கொண்டுவரப்படுவதோடு 150000 புதிய தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படவுள்ளன. சமூகக் கொடுப்பனவுகளில் இடம்பெறும் துஸ்பிரயோகங்களை தடுக்கவும் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவும் ஓய்வூதிய சட்டங்களில் சீர்திருத்தம் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## Peugeot கார் நிறுவனமும் நெருக்கடியில்..!

**ஐரோப்பாவின்** இரண்டாவது பெரிய நிறுவனமான Peugeot கார் தயாரிக்கும் நிறுவனமும் பொருளாதரா நெருக்கடியில் சிக்குகிறது. இதன் நிமித்தம் அது கார் உற்பத்தியைக்குறைக்க முடிவுசெய்துள்ளது. இதனால் எண்ணாயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்படவுள்ளனர்.

இந்த கார் நிறுவனம் பிரான்சின் தேசிய சின்னம் போல் கருதப்படுவதால் இந்த நெருக்கடியிலிருந்து நிறுவனத்தைக்காப்பாற்ற அரசு தீவிரமுயற்சி எடுத்து வருகிறது.

## Navigo சலுகை




**செப்ரெம்பர் முதல்திகதி முதல்** மாதாந்த மற்றும் வருட Navigo பாவனையாளர்கள், வார இறுதி மற்றும் விடுமுறைநாட்களில் பாரிஸ் பிராந்தியத்தில் எங்குவேண்டுமானாலும் பயணம் செய்யமுடியும். எத்தனை Zone பாவனையாளராக இருந்தாலும் இந்தநாட்களில் நீங்கள் சுதந்திரமாக பாரிசின் புறநகர் பகுதியெங்கும் பயணம்செய்யமுடியும். 2,8 மில்லயன் Navigo பாவனையாளர்கள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, ஒகஸ்ற் முதலாம் திகதிமுதல் வருடாந்த Navigo 2சதவீத விலை உயர்வையும், Mobilis 7சதவீத விலை உயர்வையும், நாளாந்த மற்றும் வார பயணச்சீட்டுக்கள் 5 சதவீத விலை உயர்வையும் சந்திக்கஉள்ளன.

2013 ஜனவரிமுதல் வருடத்தின் 365நாட்களுக்கும் செயல்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்திற்கு இது ஓர் பரீட்சார்த்த முன்னோடி முயற்சியே.

**• வாழ்த்துக் கூறுங்கள்**

உங்களுக்கு யாராவது வாழ்த்துக்கூறினால் அதை விட அழகானதாக நீங்கள் கூறுங்கள்!

(4: 86)




# கிருஷ்ணா அச்சகம்

**தரம் - குறித்த தவணை - நியாயவிலை**

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும், மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25

E-mail: krishnafrance@yahoo.com



**73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)**

பாரிஸ் – லாச்சப்பலில்

# மோகன் ஜுவலரி மார்ட்




## 25வது ஆண்டு நிறைவு

எமது வளர்ச்சியில் பங்கெடுத்து ஆதரவு வழங்கிய
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது மனம் நிறைந்த நன்றிகள்



எமது 25வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு தங்கநகை விற்பனையில் நீங்களும் கலந்து கொண்டு எம்மிடம் தங்க நகைகளை தெரிவுசெய்து உங்கள் பெயர், முகவரி என்பவற்றை அதிர்ஷ்ட கூப்பனில் பதிந்து பெட்டகத்திலிடுவதன் மூலம் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபற்றி

**புதிய கார் ஒன்றை பரிசாக பெற்றுக்கொள்ளுங்கள்.**

அத்துடன் எமது வாடிக்கையாளர்களுக்கு ஆறுதல் பரிசுகளும் காத்திருக்கின்றன...




## நீங்களும் வெல்லலாம்!



**அதிர்ஷ்ட குலுக்கல்**
**09 செப்ரெம்பர் 2012**

*அதிர்ஷ்ட கூப்பன் சலுகை:*
*10 யூன் 2012 முதல்*
*09 செப்ரெம்பர் 2012 வரை*

**Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82**
**201, rue du Fg. St. Denis - 75010 Paris** (M°: La Chapelle / Gare du Nord)
E-mail : mohanjm@hotmail.fr www.mohanjewellerymart.fr

25வது ஆண்டு நிறைவு 25வது ஆண்டு நிறைவு 25வது ஆண்டு நிறைவு 25வது ஆண்டு நிறைவு 25வது ஆண்டு நிறைவு 25வது ஆண்டு நிறைவு